## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.

## அ.வ.எண். 313/2006

இந்நீதிமன்றத்து உதவியாளர் திரு.சு.குணசேகரன் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமுலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025 – ஆம் ஆண்டு ஜுன் மாதம் 09 – ஆம் நாளில்** பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 09.06.2025**

**பெயர் – சுஜாதா**

**க/பெ – சிவக்குமார்**

**சாட்சி – PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.57 பி.எம்.**

**குறுக்கு விசாரணை–**

1. எனது வயது பிரமான வாக்குமூலத்தில் 53 என குறிப்பிட்டுள்ளதால் நான் 1972 ல் தான் பிறந்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கின் சர்வே எண் 147/1, 147/3 இவ்விடத்தின் விஸ்தீரனம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் 147/1 ல் 2.13 ஏக்கர்ஸ் 147/3 ல்2.83 ஏக்கர்ஸ் ஆகும். நான் குறிப்பிட்ட 2 விஸ்தீரனத்திற்கு இடையில் 147/2 வரும் என்றால் சரிதான். மேற் சொன்ன விஸ்தீரனம் யாருடையது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து எனக்கு நினைவு தெரிந்த பின் எப்போது பார்த்துள்ளேன் என்றால் 5 , 6 வயதிலேயே எனது பாட்டி ஊரில் இருந்தது என்று எனக்கு தெரியும்.

2. மேற்படி தாவா சொத்தினை யார் யாரிடம் இருந்து வாங்கியுள்ளார்கள் என்றால் 1979 ல் வனரோஜா என்பவர் எனது பாட்டியிடமிருந்து எனது தயாரா் சாந்தகுமாரி கிரையப்பத்திரத்தின் மூலம் வாங்கியுள்ளார். 1979 ல் எனது வயது 5 அதனால் அது எனக்கு நினைவு தெரிந்த வயதாக இருக்காது என்றால் சரிதான். ஊருக்கு வரும்போதெல்லாம் பார்த்துள்ளேன் என்று கூறியுள்ளேன் அதன்மூலம் நான் அனுப்பம்பட்டில் தொடர்ந்து வாழவில்லை என்றால் நான் 2005 ல் தான் அனுப்பம்பட்டில் குடியிருந்தேன் அதற்கு முன்பு எனது பாட்டி மட்டும் தா்ன அங்கே இருந்தார். அவரை பார்க்க எனது தந்தை வருவார் அவ்வப்போது எங்களையும்

அழைத்துக்கொண்டு வருவார்.

3. மேற்சொன்ன காரணத்தினால், தொடர்சியாக சொத்தை பராமரிப்பதற்கோ, பாதுகாப்பதற்கோ நான் நிலத்தில் சென்று பயிர் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து 1979 முன்பு இரத்தினவள்ளியம்மாளின் கணவர் இராதாகிருஷ்ணன் தான் பயிர் செய்து வந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் இல்லை இவ்வழக்கின் வாயிலாக தான் தெரியும். எனது தாயார் சாந்தகுமாரி 2ம் பிரதிவாதியான இரத்தினவள்ளியம்மாளுக்கு கிரையப்பத்திரம் மூலம் எழுதிக் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் வழக்கின் பிற்பாடு தான் 1994ல் போலி ஆவணம் மூலம் வழக்கு பிரதிவாதி கிரையம் செய்தது தெரியவந்தது.

4. இரத்தினவள்ளியம்மாளின் வாரிசுகள் தான் வழக்கு சொத்தில் பயிர் செய்து வருகிறார்கள் என்றால் இல்லை. எனது பிரமான வாக்குமூலத்தில் 4ம் பத்தியில் 8ம் வரியில் இருந்து 9ம் வரி வரை அதாவது 1987லிருந்து 1991 வரை குத்தகை முச்சிளிக்கா மூலம் தாவா சொத்தினை வாதிகள் அனுபவித்ததாகவும். அதன்பிறகு 1991ல் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாயுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டு 1994ல் அனுபவம் ஒப்படைத்ததாகவும் கூறுவது சரியல்ல என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். குத்தகை முச்சிளிக்கா சாந்தகுமாரியம்மாள் இராகிருஷ்ணனுடன் போடப்பட்டது என்றால் சரியல்ல.

5. குத்தகை முச்சிளிக்கா போட்டுஇருந்தால் குத்தகை முச்சிளிக்கா போட்டவர் அனுபவத்தில் இருக்கும் என்றால் குத்தகை முச்சிளிக்கா போட்ட விவரமே எனக்கு தெரியாது. இவ்வழக்கின் பிற்பாடு தான் எனக்கு தெரியும். வனரோஜம்மாள் சாந்தகுமாரி மற்றும் இராதாகிருஷ்ணன் மீது 1993ல் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு 348/1993 தாக்கல் செய்துள்ளார் என்று கூடுதல் பிரமான வாக்குமூலத்தில் பத்தி 6ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அவ்வழக்யக எனது பாட்டியார் எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு அவ்விரம் தெரியாது. எனது பாட்டியார் எனது தாய் மீது வழக்கு தாக்கல் செய்ய காரணம் என்ன என்றால் எனக்கு அதுகுறித்து தெரியாது.

6. வனரோஜம்மாள் என்பவரிடம் எனது தயார் மற்றும் எனது தந்தையார் ஏமாற்றி அந்த சொத்தினை கிரையம் செய்து கொண்டதால் விளம்புகை பரிகாரம்கோரி தான் அந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அதற்கு வாய்பில்லை எனது பாட்டி எங்களுடன் தான் வசித்தார்கள். நான் எனது தரப்பில் தாக்கல் செய்த வா.சா.ஆ10

(வாதிக்கு காண்பிக்கப்பட்டது) முன்பு கூறிய அசல் வழக்கின் சான்றிட்ட வழக்குரையின் சுருக்கம் என்றால் சரிதான். எனது பாட்டியார் வனரோஜம்மாள் எனது தாயார் சாந்தகுமாரி, எனது தந்தையார் பி.வி.எல். நாராயணன் மற்றும் இராதாகிருஷ்ணன் மீது தாக்கல் செய்துள்ள வழக்கு என்றால் சரிதான். கிரையம் பெற்றதாக கூறப்படும் 1979 பிறகு சுமார் 14 வருடங்கள் கழித்து எனது பாட்டி எனது தாய், தந்தை மீது தாக்கல் செய்துள்ள வழக்கு என்றால் சரிதான்.

7. வனரோஜம்மாள் என்ற எனது பாட்டியார் 1920 ல் அந்த சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் அவர் தாயார் விஜயலெட்சுமி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்கூறிய அசல் வழக்கில் 3ம் பிரதிவாதியான இராதாகிருஷ்ணன் என்ன பதில் தாக்கல் செய்திருந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அந்த பதிலுரையில் இராதாகிருஷணன் 1993 முன்பிருந்து அவர் ஸ்வாதீனத்தில் இருந்ததாக தாக்கல் செயதிருந்தார் என்றால் அந்த பதிலுரையில் உள்ள விவரம் எனக்கு தெரியாது.

**(மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம். 1.39 பி.எம்.**